**தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரின்(வளர்ச்சி) செயல்முறைகள்**
**ஆணை பிறப்பிப்பவர்: திரு.ஜே.ஜார்ஜ் ஆண்டனி மைக்கேல்,**

1821 3930

செ.மு.ஆ.எண்.வ6/20389/2017 நாள்: 23.02.2022

பொருள்: பணியமைப்பு - நேரடி நியமனம் - தொகுதி IV-ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பணியிடம் 2007-2008 மற்றும் 2012-2013 - தூத்துக்குடி மாவட்டம் - ஊரக வளர்ச்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திருமதி.எம்.முனீஸ்வரி என்பாரின் சாதிச்சான்றின் மெய்த்தன்மை அறிக்கை வரப்பெற்றது - இளநிலை உதவியாளர் நிலையில் பணியினை வரன்முறை செய்து ஆணையிடல்.

படிக்கப் பட்டவை:
1. சென்னை, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்: 4094/PSD-G/2013, நாள்: 29.05.2015.
2. சென்னை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, மாநில கூர்நோக்குக் குழு நடவடிக்கைகள் எண். 11102/CV-2(2)/2016-37 நாள்: 04.01.2022
3. சென்னை, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்: 4094/PSD-G2/2013, நாள்: 11.02.2022.

-------------------

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி IV 2007-2008 மற்றும் 2012-2013-ல் அடங்கிய பணியிடத்திற்கு நிபந்தனையுடன் கூடிய தற்காலிக தெரிவு செய்யப்பட்டு, தூத்துக்குடி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திருமதி.எம்.முனீஸ்வரி என்பாரின் சாதிச்சான்று மெய்த்தன்மை வாய்ந்தது என படிக்கப்பட்ட 2-ல் கண்டுள்ள சென்னை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, மாநில கூர்நோக்குக் குழுவின் நடவடிக்கைகளில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, படிக்கப்பட்ட 3-ல் கண்டுள்ள தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளர் கடிதத்தில் திருமதி.எம்.முனீஸ்வரி என்பவரின் விண்ணப்பம் இறுதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும், தனியரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாள் முதல் விதிகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, படிக்கப்பட்ட 1-ல் கண்டுள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, பின்வரும் நிபந்தனைக்கு உட்பட்டு கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திருமதி.எம்.முனீஸ்வரி என்பவரின் பணியினை இளநிலை உதவியாளர் நிலையில் 10.05.2013 பி.ப. முதல் வரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

**நிபந்தனை:**

**"இப்பணிநியமனம் முற்றிலும் தற்காலிகமானது. இப்பணி நியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் நிலுவையிலுள்ள வழக்குகளின் தீர்ப்புக்கு உட்பட்டது."**

இப்பொருள் தொடர்பாக தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என சான்றளிக்கப்படுகிறது. இச்செயலாணை மற்றும் பணிப்பதிவேடு ஆகியவற்றை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை அனுப்பவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இணைப்பு: பணிப்பதிவேடு.

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (வளர்ச்சி),
தூத்துக்குடி.

23/02/22

பெறுநர்

திருமதி.எம்.முனீஸ்வரி,
இளநிலை உதவியாளர்,
ஊராட்சி ஒன்றியம், கோவில்பட்டி.
(அலுவலகத் தலைவர் மூலமாக)

நகல்:

1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3.
2. வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ), கோவில்பட்டி.
3. முக்கிய ஆணைத் தொகுப்பு.